# பரத நாட்டியம்

## வாசிப்புத் துணை நூல்

# தரம் 8

(2017ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)

அழகியற்கல்வித் துறை
மொழிகள், மானுடவியல் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
www.nie.lk
info@nie.lk

**வாசிப்புத் துணை நூல்**
**பரத நாட்டியம்**
**தரம் 8**

தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
முதற் பதிப்பு : 2017

அழகியற்கல்வித் துறை
மொழிகள், மானுடவியல் சமூக விஞ்ஞானபீடம்
தேசிய கல்வி நிறுவகம்.
மஹரகம
இலங்கை.

இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

பதிப்பு:
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை.

# அறிமுகம்

இலங்கைப் பாடசாலை முறைமையில், மையப் பாடங்களாக அதாவது பிரதான பாடங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள, தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்காக நீண்டகாலமாகப் பாடத்திட்டத்துக்கு இணையாக ஆசிரியர் வழிகாட்டியும் (Teachers' Guide), பாடநூலும் (Text Books) பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அதற்கமைய ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்களுக்கும், பாடநூலை மாணவர்களுக்கும் வழங்கி மாணவர்களது அறிவுக் கண்களைத் திறக்கும் முயற்சியில் அனைவரும் ஈடுபட்டு வருகின்றனர்.

அழகியற் பாடமானது அறிவை மாத்திரமன்றி நற்பண்புகளையும், நன்மனப்பாங்குகளையும் உடைய திறன்களை வளர்ப்பதில் பெரிதும் பங்களிப்புச் செய்கின்றது. மனிதன் நற்பண்புடையவனாகும்போது அவனது நடத்தை மனித வர்க்கத்தின் இருப்புக்கும், சூழலினதும் இயற்கையினதும் இருப்புக்கும் சாதகமாக அமையும். அறிவும் நற்பண்புகளும் கொண்ட மாணவனையே இன்றைய சமூகம் வேண்டி நிற்கின்றது. அவ்வாறான ஒரு மனிதனை உருவாக்குவதற்கு அழகியற் பாடத்தையும் ஒரு பிரதான பாடமாகக் கருதிச் செயற்படுவது பொருத்தமானது. அதனை உணர்ந்து இப்பாடத்தின் மேம்பாட்டுக்காக நீண்ட காலமாகச் செயற்பட்டுவரும் நாம், மையப் பாடங்களை மட்டுமல்லாது இப்பாடத்துக்கும் பாடநூல்கள் தயாரிக்கப்படுவதன் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறோம். இது ஒரு பிரதான பாடம் அல்லாதபோதும், ஆசிரியரது கற்பித்தற் பணிக்குத் துணையாவதற்கான ஒரு கைந்நூலாக இவ்வாறான ஒரு மேலதிக வாசிப்பு நூலைக் கல்வி முறைமையில் அறிமுகஞ் செய்வதற்கான வாய்ப்புக் கிடைத்தமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். இந் நூல் மாணவர்களுக்கு வழங்கப்படும் பாடநூலுக்கு ஒப்பான ஒன்றல்ல. எனினும், ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் வலுவூட்டத்தக்க, தேசிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட, ஒரு வளமாகும். மேலும் நாடெங்கிலும் இப்பாடவிடயங்கள் தொடர்பான ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இது துணையாகும்.

வகுப்பறைக்கு வலுவட்டுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இக் கற்றல் - கற்பித்தல் வள நூலைக் கல்வி முறைமையில் அறிமுகஞ் செய்வதன் மூலம் அடைய எதிர்பார்க்கும் சிறப்பான பேறுகள் வருமாறு:

1. ஆசிரியர்களுக்குத் தேவையான பாடவிடயங்கள் எல்லாவற்றையும் ஒன்று திரட்டி வழங்குவதன் மூலம் ஆசிரியது வினைத்திறனை மேம்படுத்தல்.
2. ஆசிரியர் வழிகாட்டியில் விரிவாக இடம் பெற்றுள்ள பாடவிடயங்களை மேலும் விரிவாக முன்வைத்தல்.
3. ஆசிரியர் வழிகாட்டிக்குக் குறை நிரப்புதலாக அமைதல்.
4. கருத்து வேறுபாடுகளுக்கு உள்ளாகத்தக்க பாடவிடயங்கள் தொடர்பாகத் தேசிய ரீதியில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்குத் தேவையான திட்டவட்டமான விடயங்களை/ தர்க்கங்களை முன்வைத்தல்.
5. பாடவிடயங்களின் சமநிலை மற்றும் திட்டவட்டமான வரையறைகளை முன்வைத்தல் மூலம் மதிப்பீட்டுப் பணிகளை இலகுபடுத்தல்.
6. ஆசிரியரது அறிவை, பாடத்திட்டத்துக்கு அப்பாலும் விரிவுபுடுத்தி, பாடவிடய அறிவு தொடர்பான தன்னம்பிக்கையை உறுதிப்படுத்தல்.
7. ஆசிரியர்கள் மாணவர்கள் இரண்டு தரப்பினருக்கும் கற்றல் - கற்பித்தற் செயன்முறையை அர்த்தமுள்ள இனிய அனுபவமாக்குதல்.

உரிய ஒரு கற்றல் வளமாகிய இது, எமது நாட்டு மாணவ சந்ததியின் அறிவையும் நற்பண்புகளையும் வளர்ப்பதற்கான இனிய கற்றற் சூழலை உருவாக்குவதற்கும் ஆசிரியர்க்குத் துணையாக அமையும். ஆசிரியர்களாகிய உங்களது செயலூக்கமும் அறிவாற்றலும் மென்மேலும் விருத்தியடையட்டும். மேலும் சமகால மாணவ மாணவியர்க்கு அழகியற் பாடக் கற்றல் கற்பித்தலானது ஓர் இனிய அனுபவமாக அமையட்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன்.

**சாஸ்திரபதி சுதத் சமரசிங்ஹ**
பணிப்பாளர் (அழகியற் கல்வித் துறை)
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றலானது தொடர்ச்சியான கணிப்பீட்டுக்கு உட்பட்டு வருகின்றது. உயர்ந்த அடைவு மட்டத்தைப் பெறுவதற்குப், பரந்தளவு அனுபவங்கள் கிடைத்தல் வேண்டும். அவ்வாறு பரந்தளவு அனுபவங்களுடன் உயர்ந்த கணிப்பீட்டைப் பெறுவோர் அதிகளவு மகிழ்ச்சியடைவர். இதன் பொருட்டு உரிய நபர்கள், இடங்கள், பொருள்கள் மற்றும் சூழ்நிலைகள் கிடைத்தல் அவசியமாகும்.

பரதநாட்டியத்தைப் பயிலும் மாணவர்களின் கற்றல் அனுபவங்களை விரிவடையச் செய்வதற்காக, மேலதிக வாசிப்பு நூலைத் தயாரிக்க முடிந்தமையையிட்டுத் தேசிய கல்வி நிறுவகம் மகிழ்ச்சியடைகின்றது. இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகின்றன.

மாணவர் சமூகம் மேற்படி மேலதிக வாசிப்பு நூலைப் பயன்படுத்தி, அந்நூலில் காணப்படும் ஏனைய அறிவு மூலங்களையும் தமதாக்கிக் கொண்டு உயர்ந்த அடைவுமட்டத்தை நோக்கிச் செல்ல முடியும். இதற்கிணங்க மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர்கள் உட்பட அனைவரும் இது குறித்துக் கவனம் செலுத்துதல் வேண்டும். மேற்படி மேலதிக வாசிப்பு நூலை மென்மேலும் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான ஆலோசனைகளை அனைவரிடமும் எதிர்பார்க்கின்றோம். பிள்ளைகளின் கற்றல் அனுபவங்களை விரிவுபடுத்துவதற்குத் தேவையான சிறந்த சூழல் ஏற்பட வேண்டும் எனப் பிராத்திக்கின்றேன்.

**கலாநிதி மாம்புல்கொட சுமணரத்ன தேரர்**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.

# முன்னுரை

புதிய சவால்களை எதிர்நோக்கக் கூடியதாகத் தயாரிக்கப்பட்ட புதிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த வாசிப்பு நூல் மாணவர்களின் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டை இலகுபடுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்படுகிறது.

“பழையன கழிதலும் புதியன புகுதலும்” என்பது கலைகளுக்கும் பொருந்தி வருவதே. அந்த வகையில் புதிய சிந்தனைகளுடன் தயாரிக்கப்பட்டு 2007ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் பாடத்திட்டமானது பல புதிய அம்சங்களை உள்ளடக்கியதாக நாட்டில் இனச் சமத்துவத்துடனும் ஒற்றுமையுடனும் வாழும் புதிய சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

புதிய சிந்தனையுடன் புதிய நாளொன்றுக்காகக் காத்திருக்கும் மாணவர்களிடையே சிந்தனைத் தடங்கல்கள் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதை நோக்காகக் கொண்டு இந்நூல் அறிமுகப்படுத்தப்படுகிறது. சிறியளவு வளங்களில் பெருமளவு பயன்பெறவேண்டியது இன்றைய சமுதாயத்தின் நிலையாய் இருப்பினும் இந்நூல் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டில் பெருந்துணை புரியும் ஒரு சாதனமாகும்.

திருமதி.நிஷாந்தராகினி திருக்குமரன்
செயற்றிட்டத் தலைவர்
அழகியற்கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம.

# கலைத்திட்டக் குழு

| | | |
|---|---|---|
| ஆலோசனையும் வழிகாட்டலும் | : | கல்விசார் அலுவல்கள் சபை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| பாட நிபுணத்துவ ஆலோசனை | : | திரு. சுதத் சமரசிங்ஹ,<br>பணிப்பாளர் - அழகியற்கல்வித் துறை. |
| பாட இணைப்பாக்கம் | : | திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்,<br>செயற்றிட்டத் தலைவர்,<br>அழகியற்கல்வித் துறை. |
| எழுத்தாளர் குழு<br>(உள்வாரி) | : | திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்,<br>செயற்றிட்டத் தலைவர்,<br>அழகியற்கல்வித் துறை. |
| (வெளிவாரி) | : | திருமதி.தேவகுமாரி யோகேந்திரன்,<br>ஆசிரியை,<br>யா /தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை<br>மகா வித்தியாலயம்.<br><br>திருமதி.சியாதா ஆனந்தஜோதி,<br>ஆசிரியை,<br>யா /கோண்டாவில் இராமகிருஷ்ண<br>மகா வித்தியாலயம். |
| மொழி மேற்பார்வை | : | திரு.எஸ். செல்வகுமார்,<br>ஆசிரியர்,<br>யா /பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்<br>பாடசாலை. |
| கணினி கோர்ப்பும் வடிவமைப்பும் | : | செல்வி செல்வரஞ்சினி செல்லத்துரை,<br>ஆசிரிய நூலகர்.<br>யா / தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை<br>மகா வித்தியாலயம். |
| அட்டைப்பட வடிவமைப்பு | : | திரு. ரவீந்ர தேநுவர. |

# உள்ளுறையாக


| | |
|---|---|
| அறிமுகம் | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| முன்னுரை | v |
| கலைத்திட்டக்குழு | vi |
| உள்ளுறையாக | vii |
| அபிநயம் | 1 - 2 |
| தட்டடவு தாளம் 1 - 8 கார்வைகளுடன் | 3 - 9 |
| நாட்டடவு தாளம் கார்வைகளுடன் | 10 |
| தெய்ஹத் தெய்ஹி தாளம் கார்வைகளுடன் | 11 |
| தா தெய் தெய் த தாளம் கார்வைகளுடன் | 12 |
| தெய்யா தெய்யி தாளம் கார்வைகளுடன் | 13 |
| சிரோ பேதம் | 14 - 15 |
| பாத பேதம் | 16 |
| வேப்பிலை நடனம் | 17 |
| தத் தெய் தாம் தாளம் 1, 2, 3, 6 கார்வைகளுடன் | 18 |
| திருஷ்டி பேதம் | 19 - 20 |
| கண்ட பேதம் | 21 |
| பாத்திர லஷ்சணம் | 22 |
| அபாத்திர லஷ்சணம் | 23 |
| அரங்க தேவதாஸ்துதி | 24 |
| பரதநாட்டியம் | 25 |
| வேடனும் புறாவும் | 26 - 27 |
| கண்ணன் மாடு | 28 |
| தத் தெய் தாஹா தாளம் 1, 2, 3, 4 கார்வைகளுடன் | 29 - 30 |
| இசைக் கருவிகளின் வகைகள் | 31 - 36 |
| நாதசுரம் | 37 - 40 |
| இலங்கையில் பரதநாட்டியம் | 41 - 42 |

**தேர்ச்சி 4.0 :** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் , எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1 :** அபிநயத்தின் வகைகளை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.1.1 :** அபிநயத்தின் நான்கு வகைகளையும் அறிந்து கொள்வோம்.

## அபிநயம்

'அபிநயம்' என்பது ஒரு வடமொழிச் சொல். 'அபி' என்பதற்கு முன் என்று பொருள். 'நயம்' என்ற பதத்தின் வினைப்பகுதியான ' நீ ' என்பதற்கு 'அடைவித்தல்' என்பது பொருள். ஆகையால் 'அபிநயம்' என்பது பார்ப்பவர்கள் முன் கருத்தொன்றை வெளிப்படுத்தல் அல்லது கொண்டு வருதல் எனப் பொருள்படும். நவரசங்களுக்கான கருத்துக்களை அங்க அசைவுகளாலும், முகபாவத்தாலும் வெளியிடுதல் என்றும் சொல்லலாம்.

அபிநயம் ஆனது நான்கு வகைப்படும்.

01. ஆங்கிக அபிநயம்
02. வாச்சிக அபிநயம்
03. ஆகார்ய அபிநயம்
04. சாத்விக அபிநயம்

**ஆங்கிக அபிநயம்**

ஆங்கிக அபிநயம் என்றால் அங்கங்களின் அசைவுகளினால் செய்யப்படும் அல்லது சரீர வாயிலாக வெளிப்படுத்தப்படும் பாவமாகும். 'ஆங்கிகம்' என்னும் சமஸ்கிருத மொழியிலமைந்த சொல்லுக்கு உடல் என்பது பொருள்.

பரதமுனிவரின் கருத்துப்படி ஆங்கிக அபிநயம் அங்கம், பிரத்தியாங்கம், உபாங்கம் என்னும் மூன்று சிறப்பான பிரிவுகளாக உள. இவை திரியாங்கம் என்று கூறப்படும்.

**வாச்சிக அபிநயம்**

வாச்சிக அபிநயம் என்றால் வார்த்தைகளினால் ஒரு கருத்தை விளக்குவது. அதாவது பேச்சுக்களினால் அல்லது வார்த்தைகளினால் ஆக்கப்பட்ட செய்யுள்களிலும் நாடகங்களிலும் காவியங்களிலும் காணப்படும் வார்த்தைகளுக்கு அல்லது பேச்சுக்களுக்கு அமையச் செய்யப்படுகின்றது. வாச்சிக அபிநயம் நான்கு வகைப்படும்.

**ஆஹார்ய அபிநயம்**

உடலை அலங்கரிக்கும் அலங்காரங்களை ஆஹார்ய அபிநயம் குறிக்கின்றது. ஆடை, அலங்காரம், ஒப்பனை மூலம் கருத்தைப் புலப்படுத்தல்.
இவ் ஆஹார்ய அபிநயம் மூவகைப்படும்.

**சாத்விக அபிநயம்**

உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடே சாத்விக அபிநயமாகிறது. உணர்ச்சி மேலீட்டினால் இவை தாமாகவே தோன்றுகின்றன. மனதின் சத்துவத் தன்மையினின்றும் தோன்றி ஒருவரின் உடலில் உண்டாகும் மாற்றங்களே சாத்விக அபிநயம் எனப்படும்.

இவை எண் வகைப்படும் எனப் பரதரின் நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

**கருத்து:**

1. ஸ்தம்ப - ஸ்தம்பித்தல்
2. பிரளய - மூர்ச்சித்தல்
3. ரோமாஞ்ச - புல்லரித்தல்
4. ஸ்வேத - வியர்வை
5. வைவர்ணய - நிறமாற்றம்
6. வேபது - நடுக்கம்
7. அஷ்ரு - கண்ணீர்
8. வைஸ்வர்ய - குரல் மாற்றம்

தேர்ச்சி 4.0 : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

தேர்ச்சி மட்டம் 4.2 : அடவுகளுக்குரிய இசைக்குறியீடுகளைப் பிரயோகிப்பார்.

செயற்பாடு 4.2.1 : தட்டடவினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுவோம். (1-8 வரை)

## தட்டடவு 1 - ஆதி தாளம்
## தட்டடவு 2 - ஆதி தாளம்

| $1_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அசரம் | 7வது அட்சரம் | 8வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | | | |
| தெய்,யா | தெய்,; | தெய்,யா | தெய்,; / | தெய்,யா | தெய்,; / | தெய்,யா | தெய்,; // |
| **2ம் காலம்** | | | | | | | |
| தெய்ய<br>தெய், | தெய்ய<br>தெய், | தெய்ய<br>தெய், | தெய்ய<br>தெய் / | தெய்ய<br>தெய், | தெய்ய<br>தெய்,/ | தெய்ய<br>தெய், | தெய்ய<br>தெய், // |
| **3ம் காலம்** | | | | | | | |
| தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய்/ | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் / | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் // |

## தட்டடவு 3 - ரூபக தாளம்

| 0 | | $1_4$ | | | |
|---|---|---|---|---|---|
| **1ஆவது அட்சரம்** | **2ஆவது அட்சரம்** | **3ஆவது அட்சரம்** | **4ஆவது அட்சரம்** | **5ஆவது அட்சரம்** | **6ஆவது அட்சரம்** |
| தெய்,யா | தெய்,யா / | தெய்,; | தெய்,யா | தெய்,யா | தெய்,; // |
| தெய்ய<br>தெய்ய | தெய்,<br>தெய்ய/ | தெய்ய<br>தெய், | தெய்ய<br>தெய்ய | தெய்,<br>தெய்ய | தெய்ய<br>தெய், // |
| தெய்ய<br>தெய்ய<br>தெய்<br>தெய்ய | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய்ய/ | தெய்<br>தெய்ய<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்ய<br>தெய்<br>தெய்ய | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய்ய | தெய்<br>தெய்ய<br>தெய்ய<br>தெய் // |

# தட்டடவு 4 - ஆதி தாளம்

| $1_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் | 7வது அட்சரம் | 8வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | | | |
| தெய்,யா | தெய்,யா | தெய்,யா | தெய்,; / | தெய், யா | தெய்,யா / | தெய்,யா | தெய்,; // |
| **2ம் காலம்** | | | | | | | |
| தெய்ய<br>தெய்ய | தெய்ய<br>தெய், | தெய்ய<br>தெய்ய | தெய்ய<br>தெய் , / | தெய்ய<br>தெய்ய | தெய்ய<br>தெய், / | தெய்ய<br>தெய்ய | தெய்ய<br>தெய், // |
| **3ம் காலம்** | | | | | | | |
| தெய்ய<br>தெய்ய<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்ய<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்ய<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்ய<br>தெய்ய<br>தெய் / | தெய்ய<br>தெய்ய<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்ய<br>தெய்ய<br>தெய் / | தெய்ய<br>தெய்ய<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்ய<br>தெய்ய<br>தெய் // |

# தட்டடவு 5 - ஆதி தாளம்

| $1_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் | 7வது அட்சரம் | 8வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | | | |
| தெய்,யா | தெய்,யா | தெய்,<br>தெய், | தாம்; / | தெய்,யா | தெய்,யா/ | தெய்,<br>தெய், | தாம் ; // |
| **2ம் காலம்** | | | | | | | |
| தெய்ய<br>தெய்ய | தெய் தெய்<br>தாம் | தெய்ய<br>தெய்ய | தெய்<br>தெய்<br>தாம்/ | தெய்ய<br>தெய்ய | தெய்<br>தெய்<br>தாம்/ | தெய்ய<br>தெய்ய | தெய் தெய்<br>தாம் // |
| **3ம் காலம்** | | | | | | | |
| தெய்ய<br>தெய்ய<br>தெய்<br>தெய்தாம் | தெய்ய<br>தெய்ய<br>தெய்<br>தெய்தாம் | தெய்ய<br>தெய்ய<br>தெய்<br>தெய்தாம் | தெய்ய<br>தெய்ய<br>தெய்<br>தெய்தாம் / | தெய்ய<br>தெய்ய<br>தெய்<br>தெய்தாம் | தெய்ய<br>தெய்ய<br>தெய்<br>தெய்தாம் / | தெய்ய<br>தெய்ய<br>தெய்<br>தெய்தாம் | தெய்ய<br>தெய்ய<br>தெய்<br>தெய்தாம் // |

# தட்டடவு 6 - ஆதி தாளம்

| 1₄ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் | 7வது அட்சரம் | 8வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | | | |
| தெய்,; | தெய்,; | தாம் | ;; / | தெய்,; | தெய்,; / | தாம் ; | ;; // |
| **2ம் காலம்** | | | | | | | |
| தெய், தெய், | தாம் ; | தெய், தெய், | தாம் ; / | தெய், தெய், | தாம் ; / | தெய், தெய், | தாம் ; // |
| **3ம் காலம்** | | | | | | | |
| தெய் தெய் தாம் | தெய் தெய்தாம் | தெய் தெய்தாம் | தெய் தெய்தாம் / | தெய் தெய்தாம் | தெய் தெய்தாம் / | தெய் தெய்தாம் | தெய் தெய்தாம் // |

# தட்டடவு 7 - ஆதி தாளம்

| $1_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் | 7வது அட்சரம் | 8வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | | | |
| தெய்,; | தெய்,; | தத் ,; | தத்,; / | தெய்,; | தெய் ,; / | தாம் ; | ;, // |
| **2ம் காலம்** | | | | | | | |
| தெய், தெய், | தத்,தத், | தெய், தெய், | தாம் ; / | தெய், தெய், | தத்,தத்,/ | தெய், தெய், | தாம்; // |
| **3ம் காலம்** | | | | | | | |
| தெய் தெய் தத்தத் | தெய் தெய்தாம் | தெய் தெய் தத்தத் | தெய் தெய்தாம்/ | தெய் தெய் தத்தத் | தெய் தெய்தாம்/ | தெய் தெய் தத்தத் | தெய் தெய்தாம்// |

## தட்டடவு 8 - ரூபக தாளம்

| 0 | | $1_4$ | | | |
|---|---|---|---|---|---|
| **1ஆவது அட்சரம்** | **2ஆவது அட்சரம்** | **3ஆவது அட்சரம்** | **4ஆவது அட்சரம்** | **5ஆவது அட்சரம்** | **6ஆவது அட்சரம்** |
| தெய், ; | தெய்,; / | தெய்,; | தெய்,; | தித்,தித், | தெய் ,; // |
| தெய்,தெய், | தெய்,தெய்,/ | தித்தித்தெய், | தெய்,தெய், | தெய்,தெய், | தித்தித்<br>தெய், // |
| தெய்தெய்<br>தெய்தெய் | தித்தித்தெய்<br>தெய் தெய்/ | தெய்தெய்<br>தித்தித்தெய் | தெய்தெய்<br>தெய்தெய் | தித்தித்தெய்<br>தெய்தெய் | தெய்தெய்<br>தித்தித்தெய் // |

**தேர்ச்சி 4.0 :** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2 :** அடவுகளுக்குரிய இசைக்குறியீடுகளைப் பிரயோகிப்பார்.

**செயற்பாடு 4.2.2 :** நாட்டடவினையும் தெய்கத் தெய்ஹி அடவினையும் இசைக்குறியீட்டுடன் எழுதுவோம்.

## நாட்டடவு - ஆதி தாளம்

| $1_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் | 7வது அட்சரம் | 8வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | | | |
| தெய்,யும், | தக்,க, | தெய்,யும், | தாம் ;/ | தெய்,யும், | தக்,க, / | தெய்,யும், | தாம்; // |
| **2ம் காலம்** | | | | | | | |
| தெய்யும் தத்த | தெய்யும் தாம் | தெய்யும் தத்த | தெய்யும் தாம் / | தெய்யும் தத்த | தெய்யும் தாம் / | தெய்யும் தத்த | தெய்யும் தாம் // |
| **3ம் காலம்** | | | | | | | |
| தெய்யும் தத்த தெய்யும் தாம் | தெய்யும் தத்த தெய்யும் தாம் | தெய்யும் தத்த தெய்யும் தாம் | தெய்யும் தத்த தெய்யும் தாம் / | தெய்யும் தத்த தெய்யும் தாம் | தெய்யும் தத்த தெய்யும் தாம்/ | தெய்யும் தத்த தெய்யும் தாம் | தெய்யும் தத்த தெய்யும் தாம் // |

# குதித்து மெட்டடவு

| $1_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் | 7வது அட்சரம் | 8வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | | | |
| தெய்,; | ஹுத் ,; | தெய் ,; | ஹி,;/ | தெய் ,; | ஹுத் ,;/ | தெய் ,; | ஹி,;// |
| **2ம் காலம்** | | | | | | | |
| தெய்,ஹுத், | தெய்,ஹி, | தெய்,ஹுக், | தெய்,ஹி,/ | தெய்,ஹுக், | தெய்,ஹி,/ | தெய்,ஹுத், | தெய்,ஹி,// |
| **3ம் காலம்** | | | | | | | |
| தெய்ஹுத் தெய்ஹி | தெய்ஹுத் தெய்ஹி | தெய்ஹுத் தெய்ஹி | தெய்ஹுத் தெய்ஹி/ | தெய்ஹுத் தெய்ஹி | தெய்ஹுத் தெய்ஹி/ | தெய்ஹுத் தெய்ஹி | தெய்ஹுத் தெய்ஹி// |

**தேர்ச்சி 4.0 :** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2 :** அடவுகளுக்குரிய இசைக்குறியீடுகளைப் பிரயோகிப்பார்.

**செயற்பாடு 4.2.3 :** தாதெய் தெய்த, தெய்யா தெய்யி ஆகிய அடவுகளை இசைக்குறியீட்டுடன் எழுதுவோம்.

**தா ; தெய்,; தெய்,; த,;**

| $1_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் | 7வது அட்சரம் | 8வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | | | |
| தா ; | தெய் ,; | தெய் ,; | த,; / | தித் ,; | தெய் ,;/ | தெய் ,; | த, ;// |
| **2ம் காலம்** | | | | | | | |
| தா தெய், | தெய்,த, | திந்,தெய், | தெய்,த,/ | தா தெய், | தெய்,த, / | திந்,தெய், | தெய்,த,// |
| **3ம் காலம்** | | | | | | | |
| தாதெய் தெய்த | திந்தெய் தெய்த | தாதெய் தெய்த | திந்தெய் தெய்த/ | தாதெய் தெய்த | திந்தெய் தெய்த/ | தாதெய் தெய்த | திந்தெய் தெய்த// |

# தெய்,; யா ; தெய்,; யி,; (4) - ஆதிதாளம்

| $1_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அசரம் | 7வது அட்சரம் | 8வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | | | |
| தெய் , ; | யா ; | தெய் , ; | யி, ; / | தெய் , ; | யா ;/ | தெய்,; | யி, ; // |
| **2ம் காலம்** | | | | | | | |
| தெய்,யா | தெய்,யி, | தெய்,யா | தெய்,யி,/ | தெய்,யா | தெய்,யி,/ | தெய்,யா | தெய்,யி,/ |
| **3ம் காலம்** | | | | | | | |
| தெய்யா<br>தெய்யி | தெய்யா<br>தெய்யி | தெய்யா<br>தெய்யி | தெய்யா<br>தெய்யி/ | தெய்யா<br>தெய்யி | தெய்யா<br>தெய்யி/ | தெய்யா<br>தெய்யி | தெய்யா<br>தெய்யி // |

தேர்ச்சி 4.0 : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

தேர்ச்சி மட்டம் 4.3 : பரதநாட்டியத்தின் பொதுவான அம்சங்களை அறிவார்.

செயற்பாடு 4.3.1 : சிரோபேதம், பாதபேதங்களை அறிந்து கொள்வோம்.

## சிரோபேதம்

சமம் உத்வாஹிதம் அதோமுகம் ஆலோலிதம் துதம்//
கம்பிதம்ச பராவிருத்தம் உத்ஷிப்தம் பரிவாஹிதம் /
நவதா கதிதம் ஷீர்ஷம் நாட்யசாஸ்திர விஷாரதைஹி //

சிரோபேதங்களின் தலை வேறுபாடு ஒன்பது வகைப்படும்.

1. **சமம்**

தலையை நேராக வைத்திருத்தல்.

விநியோகம் :

நிருத்தியாரம்பம் (நாட்டியத்தின் ஆரம்பம்) தியானம் செய்தல், கர்வம், ஊடலினால் சினம், ஸ்தம்பித்தல், எவ்வித காரியத்திலும் ஈடுபடாதநிலை, விஸ்வாஸம், அதிர்ச்சி.

2. **உத்வாஹிதம்**

தலையை உயரத் தூக்குதல்

விநியோகம் :

கொடி, சந்திரன், நட்சத்திரம், ஆகாயம், மலை, ஆகாயத்தில் செல்லக்கூடிய வஸ்துக்கள் இவற்றைப் பார்க்க உதவும்.

3. **அதோமுகம்**

பூமியைப் பார்த்து வணங்கி நிற்றல் (குனிந்த நிலை)

விநியோகம் :

வெட்கம், துக்கம், வணக்கம், ஏக்கம், அநாவசியமான கவலை, மயக்கம், கீழே உள்ள பொருட்களைப் பார்த்தல், நீண்ட நித்திரை, நீரில் மூழ்குதல்.

4. **ஆலோலிதம்**

தலையை வட்டமாகச் சுற்றுதல்

விநியோகம் :

தூக்கத்தின் வேகம், பேய் பிடித்திருத்தல், குடிமயக்கம், மயக்கம், பிரயாணம்(சுற்று), அருவருப்பை உண்டாக்கும் அடக்க முடியாத சிரிப்பு, மதமம், உருளல்.

5. **துதம்**

தலையை இடமிருந்து வலமாகவும் வலமிருந்து இடமாகவும் அசைத்தல்

விநியோகம் :

‘அது பழக்கத்தில் இல்லை’ என்று கூறல், இரு பக்கங்களிலும் விரைவாகப் பார்த்தல், பிறர் உற்சாகத்தைக் குறைத்தல், ஆச்சரியப்படுதல், வருத்தமுறல், விருப்பமற்ற ஜூரம், பயம், மது அருந்தியவனுடைய முதல் அவஸ்தை, குளிர், யுத்தம், முயற்சி, தடுப்பது, பழிக்குப்பழி, தன் அவயவங்களைப் பார்த்து பக்கத்திலிருப்பவர்களைக் கூப்பிடுவது, பாரம் தூக்கல்.

6. **கம்பிதம்**

தலையை மேலும் கீழும் அசைத்தல்

விநியோகம் :

கோபம், குற்றத்தை எடுத்துக் காண்பித்தல், ‘நிறுத்து’ என்று சொல்லுதல், விசாரணை, சுட்டிக்காண்பித்தல், அருகிலிருந்து கூப்பிடுதல், தேவதைகளைக் கூப்பிடல் (ஆவாகனம் செய்தல்) பயமுறுத்தல், என்ன எனக் கேட்டல்.

7. **பராவிருத்தம்**

தலையை பாராமுகமாய் (அலட்சியமாக) ஒரு பக்கம் திருப்புதல்.

விநியோகம் :

‘அந்தக் காரியத்தைச் செய்’ என்று உத்தரவிடல், கோபம், அவமானம் இவைகளால் முகத்தைத் திருப்பிக் கொள்ளுதல், அலட்சியம் செய்தல், தலைமயிரை முடிதல், அம்பறாத் தூணியைப் பார்த்தல், வெட்கம், ஒன்றை எடுத்துப் பக்கத்தில் வைத்தல்.

8. **உத்ஷிப்தம்**

தலையை ஒரு பக்கமாகத் திருப்பிப் பின் உயரத் தூக்கல்.

விநியோகம் :

‘இதைப்பிடி’ என்று உத்தரவிடுதல், அல்லது ‘வா’ என்று அழைத்தல், ஏதாவது பொருட்களைத் தாங்குதல், அங்கீகரித்தல்.

9. **பரிவாஹிதம்**

தலையை மெதுவாகச் சாமரையைப் போல் இரு பக்கங்களிலும் அசைத்தல்.

விநியோகம் :

காற்று நிரப்புதல், ஆமோதித்தல், விரகதாபம், மோகம், தோத்திரம், திருப்தி, ஆராய்தல், சந்தோஸம், பிரிவு, புகழ்தல்.

## பாதபேதம்

மண்டலோத் பிளவனே சைவப்ரமரீ பாதசாரிகா /
சதுர்தா பாதபேதஸ்ய தேஹாம் லக்ஷண முஜ்யதே //

**கருத்து**

மண்டலம் - நிற்றல்
உத்ப்லவனம் - பாய்தல்
ப்ரமரீ - சுற்றி வரும் அசைவுகள்
பாதசாரிகா - நடக்கும் அசைவுகள்

**தேர்ச்சி 2.0 :** சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும், வெவ்வேறு வகையான பாடல்களையும், கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 2.3 :** கிராமியப் பாடல்களுக்குத் தாமே அபிநயம் அமைத்துக் கொலுப்பித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 2.3.1 :** வேப்பிலை நடனம் ஒன்றினை அமைத்து ஆற்றுகைப்படுத்துவோம்.

## வேப்பிலை நடனம்

இது தமிழர்களின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் நடனமாகும். சமய கலாசாரத்தின் ஊடாக ஆன்மீக முறைப்படி கடவுளிடம் வேண்டுதல் வரம் கேட்டு ஆடப்படுவதாகும். வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட தமிழர் வாழும் பிரதேசங்களில் பெண்கள் பாரம்பரியமாக ஆடுவதாகும். அம்மன் ஆலயங்களில் உற்சவ காலங்களில் இந் நடனம் ஆடுவதைக் காணலாம். இது இறைபக்தி நம்பிக்கையை சமுதாயத்திற்குச் சொல்லும் அடையாளமாகக் காணப்படுகிறது. பருவகால மாற்றங்களின் போதும் சூழல் மாறுபடும்போதும் காற்று அசுத்தமடையும்போதும் வேப்பிலையைச் சுகாதாரத்திற்குப் பயன்படுத்துவர். வேப்பிலைக்குக் கிருமியை அழிக்கும் சக்தி உண்டு. உடல், உள ஆன்மீக நலத்தைப் பேணும் நடனமாக விளங்குகிறது.

**தேர்ச்சி 4.0 :** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2 :** அடவுகளுக்குரிய இசைக்குறியீடுகளைப் பிரயோகிப்பார்.

**செயற்பாடு 4.2.4 :** தத்தெய் தாம் அடவினை இசைக்குறியீட்டுடன் எழுதுவோம்.

## தத் ,; தெய் ,; தாம் ; ;; (1, 2, 3, 6 ) - ஆதி தாளம்

| $1_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் | 7வது அட்சரம் | 8வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | | | |
| தத், ; | தெய் , ; | தாம் ; | ; / | தித் , ; | தெய் , ;/ | தாம் ; | ;; // |
| **2ம் காலம்** | | | | | | | |
| தத்,தெய், | தாம் ; | தித்,தெய், | தாம் ; / | தத்,தெய், | தாம் ; / | தித்,தெய், | தாம் ; // |
| **3ம் காலம்** | | | | | | | |
| தத்தெய் தாம் | தித்தெய் தாம் | தத்தெய் தாம் | தித்தெய் தாம் / | தத்தெய் தாம் | தித்தெய் தெய்தாம்/ | தத்தெய் தாம் | தித்தெய் தாம்// |

தேர்ச்சி 4.0 : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3 : பரதநாட்டியத்தின் பொதுவான அம்சங்களை அறிவார்.**

**செயற்பாடு 4.3.2 :** திருஸ்டி பேதம், கிரிவா **பேதங்களை** அறிந்து கொள்வோம்.

## திருஷ்டி பேதம் (8)

சமம் ஆலோகிதம் சாசி ப்ராலோகித நிமீலிதே//
உல்லோகித அனுவ்ருத்தேச ததாசைவாவ லோகிதம் /
இதியஷ்டௌ திருஷ்டி பேதா ஹஸ்யுஹ் க்ர்த்தி தாஹ //

கண்களின் தொழில் பேதங்கள் எட்டு வகைப்படும்.

1. **சமம்**
   ஆனந்தத்தோடு கூடி தேவ மங்கையர் போல் பார்ப்பது. அதாவது இரு கண்களையும் மூடாமல் நேராகப் பார்த்தல்.

   விநியோகம் :
   நாட்டியத் தொடக்கம், அளவுகோல் (தராசு), மற்றவர்கள் என்ன எண்ணுகின்றார்கள் என்று யோசித்தல், ஆச்சரியம், விக்கிரகம் (சிலை), நினைத்தல்.

2. **ஆலோகிதம்**
   நன்றாகத் திறந்த கண்களோடு வட்டமாகச் சுழற்றித் தெளிவாகப் பார்த்தல்.

   விநியோகம் :

   அநேக விதமான பொருட்களைச் சுட்டிக்காட்டுதல், யாசிப்பது (பிச்சை எடுத்தல்), குயவன் சக்கரம் சுற்றுவது (குயவன் திரிச்சக்கர திரிவு).

3. **சாசி**
   தான் இருக்குமிடத்திலிருந்து குறுக்கே பார்த்து கடைக்கண்களால் நோக்குவது (வலதுபக்கம்)

   விநியோகம் :
   அம்பினால் அடையாளம் செய்வது, மறைமுகமாகச் சொல்வது, பழைய சம்பவத்தை நினைப்பது, மீசையைத் தடவுதல், கிளி, மகளிர் பந்தடித்தல், காரியங்களின் தொடக்கம்.

4. **ப்ராலோகிதம்**
   இரு பக்கங்களிலும் மாறி மாறிப் பார்த்தல்(ஒரு பக்கத்திலிருந்து மற்றோர் பக்கத்தில் பார்ப்பது, மீண்டும் மறுபக்கம் பார்த்தல்)

விநியோகம் :

அநேக விதமான பொருட்களைச் சுட்டிக்காட்டுதல், யாசிப்பது (பிச்சை எடுத்தல்), குயவன் சக்கரம் சுற்றுவது (குயவன் திரிச்சக்கர திரிவு).

3. **சாசி**

தான் இருக்குமிடத்திலிருந்து குறுக்கே பார்த்து கடைக்கண்களால் நோக்குவது (வலதுபக்கம்)

விநியோகம் :

அம்பினால் அடையாளம் செய்வது, மறைமுகமாகச் சொல்வது, பழைய சம்பவத்தை நினைப்பது, மீசையைத் தடவுதல், கிளி, மகளிர் பந்தடித்தல், காரியங்களின் தொடக்கம்.

4. **ப்ராலோகிதம்**

இரு பக்கங்களிலும் மாறி மாறிப் பார்த்தல்(ஒரு பக்கத்திலிருந்து மற்றோர் பக்கத்தில் பார்ப்பது, மீண்டும் மறுபக்கம் பார்த்தல்)

விநியோகம் :

இரண்டு பக்கங்களிலும் உள்ள பொருட்களைச் சுட்டிக்காண்பித்தல், அளவுகடந்த வாத்ஸல்யம் (பற்று) நகருதல், மூடத்தனம் (புத்தியீனம்), பிச்சையெடுத்தல், சலனம்.

5. **நிமீலிதம்**

பாதி மூடிய கண்களை (அரைவிழி) உடைய பார்வை.

விநியோகம் :

பாம்பு, அடிமைத்தனம், தோத்திரங்களை மனனம் செய்தல், வந்தனம், கூர்ந்து கவனித்தல், பைத்தியம், தியானம், ஜபம் செய்தல்.

6. **உல்லோகிதம்**

உயரே செலுத்திய பார்வை

விநியோகம் :

கொடியின் உச்சி, உயரம், தேவமண்டலம், பூர்வஜென்மம், கோபுரம், சந்திரவெளிச்சம் முதலியவற்றைப் பார்த்தல்.

7. **அனுவ்ருத்தம்**

மேலும் கீழும் விரைந்து செலுத்தப்படும் பார்வை

விநியோகம் :

கோபப் பார்வை, நண்பர்களை (அன்புக்குரியவர்களை) வரவேற்றல்.

8. **அவலோகிதம்**

கண்களை கீழ் நோக்கிப் பார்த்தல்

விநியோகம் :

நிழலைப் பார்ப்பது, பிரதிபிம்பம், ஆலோசனை செய்தல், விவாதம், நன்கு படித்தல், தன் அவயவங்களைப் பார்த்தல், செல்லுதல், உற்றுப் பார்த்தல்.

## கிரிவா பேதம் (கண்ட பேதம்) (4)

ஸுந்தரீச திரஸ்சீனா ததைவ பரிவர்த்திதா/

ப்ரகம்பிதம் ச பாவக்னேயா க்ரீவா சதுர்விதா//

கழுத்தின் பேதங்கள் நான்கு வகைப்படும்.

**01. ஸுந்தரீ க்ரிவா :**
கழுத்தை வலது இடது பக்கமாக (குறுக்கே) அழகாக அசைத்தல் (அட்டமி)

விநியோகம் :
பலகாரிய ஆரம்பங்கள் நட்பின் (அன்பின்) தொடக்கம் (நல்லோர் சிநேகாரம்பம்) மிகவும் நல்லது என்ற பாவத்தை விளக்குவது. முயற்சி, மகிழ்ச்சியோடு ஆமோதித்தல், சரசங்கள், அகலம்.

**02. திரஸ்சீனா க்ரீவா :**
பாம்பு ஊர்வது போல் இரண்டு பக்கங்களிலும் கழுத்தை உயரே அசைத்தல்.

விநியோகம் :
கத்தியுடன் பயிற்சி செய்தல் (வாட் பயிற்சி) பாம்பு ஊர்ந்து செல்லுதல்.

**03. பரிவர்த்திதா க்ரீவா :**
ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு (இடம் வலமாக) பிறைச்சந்திரன் போல் கழுத்தை அசைத்தல்.

விநியோகம் :
சிருங்கார நடனம், ப்ரியையினுடைய இரண்டு கன்னங்களிலும் முத்தமிடல் அல்லது காதலனுடைய இரண்டு கன்னங்களிலும் முத்தமிடல்.

**04. ப்ரகம்பிதா க்ரீவா :**
பெண்புறாவினுடைய (மாடப்புறா) கழுத்து அசைவது போல் கழுத்தை முன்னும் பின்னும் அசைத்தல்.

விநியோகம் :
தேசிய நடனம், “நீ, நான்” என்று சொல்லுவது, சம்போக காலத்தில் தம்பதிகளின் ஏகாந்தமான சம்பாஷணை, ஊஞ்சலில் ஆடுவது, மயில், புறா.

**தேர்ச்சி 4.0 :** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3 :** பரத நாட்டியத்தின் பொதுவான அம்சங்களை அறிவார்.

**செயற்பாடு 4.3.3 :** பாத்திர, அபாத்திர இலட்சணங்களையும் அரங்க தேவதாஸ்துதியையும் அறிந்து கொள்வோம்.

## பாத்திர இலட்சணம்

மன்னர் முதல் மூன்று குலத்துதித்தவள். சிவந்த நிறமும் அழகுமுள்ளவள். அன்னம் போன்றவள். இத்தகையவள் அரச சிம்மாசனத்தின் முன்னே பத்து முழம் விட்டு கீழ்த்திசையில் திரையை நீக்கிப் பூரணச்சந்திரன் போலவும் பூத்த வஞ்சிக்கொடி போலவும் கார்மேகம் திறந்து மின்னல் வெளிப்பட்டது போலவும் விளங்கத் தோன்றுவாள்.

அவள் ஒத்திய தாளம் சுருதி தவறாத சொல்லை ஒக்க அடித்த பிறகு, தான் கற்ற கல்வி மறவாமல், சாஸ்திர விசாரணையில் கருத்தை ஊன்றி பித்துநோய், சலிப்பு, மெலிவு, பின்செல்லுதல் முதலிய குற்றங்கள் இல்லாமல், பக்தியுடன் மதுரவாசகம் பேசி இசைப்பாடலைப் பாடுவாள்.

மேலும் அவள் மிகப்பருத்தல், மிக இளைத்தல், மிக உயரம், மிகக் குறுகல், இல்லாத உடலும் தக்கரூபமும், உத்தம தனங்களும் பெற்று அறிவு உரம் பெற்றவளாய், மனோகரம் தாளசுர ஞானம், விசால நேத்திரம் அவயவ அமைப்பு, முகமலர்ச்சி இவற்றை உடையவராய் ஹஸ்த அங்க வின்யாசங்களை அறிந்தவளாயிருப்பாள்.

குர்ஜ்ஜா, மராட, விலாட, சௌராஷ்டிர மன்னர்களின் கோத்திரத்தில் பிறந்தவளாய் குறில் நெடில் இவற்றின் இசையை அறிந்தவளாய் பிறருடைய மனத்தை அறியும் சக்தி பெற்றவளாய் தான் கபடமும் கோபமில்லாமல் துறவிகள், தெய்வம், குருக்கள் இவர்களிடம் பக்தி கொண்டவளாயிருப்பாள்.

மண்டலம், தானம், நிர்த்தம், வாத்தியம், கீதம், தாளம் இவற்றை அனுசரிக்கும் அறிவும் கொண்டு உத்தம ஆபரணங்களையும் அவள் தரித்திருப்பாள். இத்தகையவள் சபையினர் முன் ஆடுதற்குரிய தகுதி பெற்றவளாம்.

## அபாத்திர இலட்சணம்

பெரியதலை, செங்கண், பிளந்தவாய், பெரியகால், கைகள், கர்ப்பம், நோய், தடித்தமெய், கொங்கையில்லாமை, முகத்தில் பெருகும் வியர்வை துடைத்தல், கண்பிசைதல், தலைசொறிதல், சோம்பி உரு நெளித்தல், அரசனுக்குப் பின்காட்டுதல், நடுங்கும் உடலைப் பெற்றிருத்தல்.

பூவிழுந்த கண், கூந்தலின்மை, அம்மை வடுவுள்ள முகம், தொங்கியதனம், மிகப் பருத்திருத்தல், மிக இளைத்திருத்தல், அதிகம் கூனல், கோபம், திடமின்மை, ஒரு கண்ணுடமை, வெள்ளுதடு, மிக இளமை, பனை போன்ற உயரம், மிகக் குறுகல், ஈனசுரம், தளர்ந்தமெய் போன்றனவும்.

மாறுகண், முழிக்கண், குழிக்கண், நீர்க்கண், மாலைக்கண் முதலான கண் குற்றங்களுடைமை, சொற்பொருள் அறியாமை, குறிப்பறியாமை, பொறுமையின்மை, குருவின் சொல் மீறிய நடத்தையுடைமை, வாத்தியம், கானம், நிருத்தம் இவற்றின் விதங்களை அறியாமை. கறுப்பு நிறம், செவிடு, கழுத்து நீளம், முகநீளம் ஆகியவற்றை உடைமை, கல்வியில்லாமை ஆகியனவும்.

கூந்தலைச் சபை முன்னே கோதி முடித்தல், உடலைச் சொறிதல், ஈரநாக்கினால் உதடுகளைத் தடவுதல், உதட்டைக் கடித்தல், மூக்கைத் தடவுதல், இரு குரலுடமை, தரையில் விழுந்த ஆபரணத்தைத் தேடல் ஆகியவை கொண்டவள் அபாத்திரமாவாள்.

## அரங்க தேவதாஸ் துதி

பரதகுல பாக்யகலிகே பாவரஸானந்த பரிணதாகாரே /
ஜகதேக மோஹனகலே ஜயஜய ரங்காதி தேவதே தேவி //

**கருத்து :**

அரங்க தேவதையை ஜெயம் உண்டாகட்டும். நீ பரத குலத்துக்கு மொட்டுப் போன்றவள். பாவம், ரஸம் என்பவற்றால் பாக்கியம் உண்டாக்கக்கூடிய ஆனந்த சொரூபமானவளே, உலகத்தையெல்லாம் மோகிக்கச் செய்யும் கலையாக இருக்கின்ற அரங்கதேவதையே ஜெயம் உண்டாகட்டும்.

தேவி பரதகுலத்தின் பாக்ய மலரே நிலை - மனோநிலை உணர்ச்சி வெளிப்பாடு என்பவற்றினால் ஏற்படும் மகிழச்சியுருவாய் அமைந்தவளே உலகின் ஏக கவர்ச்சிகரமான ஓசையே மேடையின் தேவியே உன்னை வாழ்த்துகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 5.0 | : | நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார். |
| **தேர்ச்சிமட்டம்** | 5.1 | : | இந்திய நடனத்தின் கலாசாரப் பின்னணியை அறிவார். |
| **செயற்பாடு** | 5.1.1 | : | தமிழகத்தின் சாஸ்திரிய நடனமான பரதநாட்டியத்தைப் பற்றி அறிவோம். |

## பரதநாட்டியம்

- தென்னிந்தியாவில் தோற்றம் பெற்ற நடனம்.
- பரதமுனிவரால் கொண்டுவரப்பட்டதாலும் பாவம், ராகம், தாளம் என்பவற்றின் சேர்க்கையாலும் பாரதநாட்டில் தோற்றம் பெற்றதாலும் பரதநாட்டியம் எனப்பட்டது.
- நிருத்தம், நிருத்தியம், நாட்டியப் பகுதிகளுடன் தாண்டவம், லாஸ்யம் என்பவற்றை உள்ளடக்கியது.
- ஒற்றைக்கை முத்திரை இருபத்தெட்டையும் இரட்டைக்கை முத்திரை இருபத்திநான்கையும் கொண்டது.
- சிரோ, திருஷ்டி, கண்ட, பாத பேதங்களை உள்ளடக்கியது.
- நாட்டியக் கச்சேரியில் அலாரிப்பு தொடக்கம் தில்லானா வரை ஆடப்படும்.
- பரதநாட்டியப் பக்கவாத்தியமாக மிருதங்கம், வயலின், புல்லாங்குழல், நட்டுவாங்கத் தாளம் என்பன பயன்படுத்தப்படும்.
- பரதநாட்டிய உடை பஞ்சகச்சம் ஆகும்.
- ஆடை, ஆபரணம் பொன்னிறமான தங்கமுலாம் பூசப்பட்ட கல்பதித்த அணிகலன்கள் அணியப்படும்.
- தலை பின்னல் கொண்டை போட்டு மலர்கள் வைக்கப்பட்டிருக்கும்.
- காலில் சலங்கை அணியப்பட்டிருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 2.0 | : | சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும் வெவ்வேறுவகையான பாடல்களையும், கோர்வைகளையும் |

அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 2.2 :** கதைப்பாடல்களுக்கு அபிநயத்தினை முன்வைப்பார்.

**செயற்பாடு 2.2.2 :** கதைப்பாடல்களுக்கு அபிநயத்தினை அமைப்போம்.
(வேடனும் புறாவும்)

புறா : வயிறாற உண்டோம் நாம் அண்ணா - சற்று
மரக்கொப்பில் தங்கியே இளைப்பாறிச் செல்வோம்.
வயிறாற உண்டோம் நாம் அண்ணா.

அண்ணா புறா : வேடர்கள் வரும் நேரம் தம்பி - உனக்கு
வீணாகக் கொலையுண்ண விருப்பமோ சொல்லு
வேடர்கள் வரும் நேரம் தம்பி

தம்பி புறா : கடவுளை நம்பினோர் அண்ணா - என்றும்
காப்பாற்றப்படுவது திண்ணமோ அண்ணா.

வேடன் : 1. வந்தேன் ஓடி வந்தேன் - இதோ
வந்தேன் வேடனே - வன
விலங்குதன்னைக் கொன்று தின்ன
வேடனே வந்தேன்.

2. நேற்று முழுதும் பட்டினியாக
வாடிக்கிடந்தேனே - இன்று
நன்றாய்ப் புசித்துக் கழிக்க
இரை கிடைக்கணுமே
இரை கிடைக்கணுமே.

3. அந்த மானும் இந்த மரையும் அகப்பட வேணுமே
எந்தன் பசி தீர்த்திட - நல்ல
இரை கிடைக்கணுமே.

புறா : வேடனும் விரைகிறான் வில் அம்பு தொடுக்கிறான்
வேளையும் வந்ததே தம்பி தம்பி
காலும் வருகுதில்லை
கையும் வருகுதில்லை - கண்ணும் இருளுதே தம்பி தம்பி
யார் தான் உதவி செய்வார்
ஐயோ நாம் சாகிறோம் தம்பி தம்பி.

பாம்பு : புற்றுக்குள்ளே நானும் வீற்றிருப்பேனே
புல்லுக்குள்ளே வளைந்து சென்றிடுவேனே

பொல்லாதவரைக் கொன்று தின்றிடுவேன்
பொழுதுபட்டால் வெளியில் வந்திடுவேன்.

அகப்பட்டால் கொடும்பாவி வேடன் அவன்
தனிமைப் புறாக்களைக் கொல்தல் நன்றோ
புறாக்களே தப்பி நீங்கள் ஓடுங்கள்
போடுவேன் வேடனின் காலில் கடி.

ஆடு பாம்பே ........

கடவுளை நம்பினோர் அண்ணா - என்றும்
காப்பாற்றப்படுவது திண்ணமே அண்ணா.

**தேர்ச்சி 2.0 :** சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும் வெவ்வேறுவகையான பாடல்களையும், கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 2.2 :** கதைப்பாடல்களுக்கு அபிநயத்தினை முன்வைப்பார்.

**செயற்பாடு 2.2.2 :** கதைப்பாடல்களுக்கு அபிநயத்தினை அமைப்போம். (கண்ணன் மாடு கன்று மேய்த்து).

## அபிநயப் பாடல்

கண்ணன் மாடு கன்று மேய்த்து
வேணுகானம் பாடுவான்
வெண்ணை திருடித் தின்பதற்கு
வீடு வீடாய் ஓடுவான்

வீட்டினுள்ளோர் உறங்குகின்ற
வேளை நோக்கி ஓர்தினம்
வாட்டமின்றித் துணிவு கொண்டு
வந்து சேர்ந்தான் மாயவன்

ஊர்ந்து சென்று பூனை போல
உறியை எட்டித் தொட்டனன்
சேர்ந்த பானை மூடி வீழ்ந்து
சிதறி ஓசை கேட்டது

ஆச்சி அந்த ஓசை கேட்டு
யார் அதென்று கூவினாள்
கூச்சமின்றிக் கண்ணன் என்று
கூறி நின்றான் மாயவன்

எங்கு வந்தாய் என்ன வேலை
என்று ஆச்சி கேட்டனள்
எங்கள் ஆச்சி வீடு தேடி
எய்தினன் காண் அம்மையே

கெட்டிக்காரன் உறியை எட்டிக்
கையை வைத்த தேனடா?
சட்டி மூடி தட்டி உள்ளே
எட்டிப் பார்த்த தேனடா?

ஒன்றும் இல்லை என்று கண்ணன்
உண்மை போலப் பேசினான்
வெண்ணெய் தனில் மெய்யெறும்பு
விரட்டினல் காண் அம்மையே

பெண்கள் மாயன் விந்தையெல்லாம்
பேசுவதற்குக் கூடினர்
வெண்ணெய் தன்னை மாதர் மீது
வீசிக் கண்ணன் ஓடினான்.

தேர்ச்சி 4.0 : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

தேர்ச்சி மட்டம் 4.2 : அடவுகளிற்குரிய இசைக்குறியீடுகளைப் பிரயோகிப்பார்.

செயற்பாடு 4.2.5 : தத்தெய் தாஹா ( 1 - 4) அடவின் சொற்கட்டினை இசைக்குறியீட்டுடன் எழுதுவோம்.

## தத் ,; தெய் ,; தா ; ஹா ; - முதலாவது - ரூபக தாளம்

| 0 | | $1_4$ | | | |
|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | |
| தத், ;<br>தா ;<br>தித் , ;<br>தா ; | தெய் ,;/<br>ஹா; /<br>தெய் ,;/<br>ஹா ;/ | தா ;<br>தத், ;<br>தா ;<br>தித் , ; | ஹா ;<br>தெய் ,;<br>ஹா ;<br>தெய் ,; | தித் , ;<br>தா ;<br>தத், ;<br>தா ; | தெய் , ; //<br>ஹா ; //<br>தெய் ,;//<br>ஹா ; // |
| **2ம் காலம்** | | | | | |
| தத்,தெய்,<br>தித்,தெய், | தாஹா/<br>தாஹா/ | தித்,தெய்,<br>தத்,தெய், | தாஹா<br>தாஹா | தத்,தெய்,<br>தித்,தெய், | தாஹா //<br>தாஹா // |
| **3ம் காலம்** | | | | | |
| தத்தெய்<br>தாஹா | தித்தெய்<br>தாஹா/ | தத்தெய்<br>தாஹா | தித்தெய்<br>தாஹா | தத்தெய்<br>தாஹா | தித்தெய்<br>தாஹா// |

**தத் ,; தெய் ,; தா ; ஹா ; - இரண்டாவது -மூன்றாவது - நான்காவது - ஆதி தாளம்**

| $1_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் | 7வது அட்சரம் | 8வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | | | |
| தத், ; | தெய் , ; | தா ; | ஹா ; / | தித் , ; | தெய் , ;/ | தா ; | ஹா; // |
| **2ம் காலம்** | | | | | | | |
| தத்,தெய், | தாஹா | தித்,தெய், | தாஹா / | தத்,தெய், | தாஹா / | தித்,தெய், | தாஹா // |
| **3ம் காலம்** | | | | | | | |
| தத்தெய் தாஹா | தித்தெய் தாஹா | தத்தெய் தாஹா | தித்தெய் தாஹா/ | தத்தெய் தாஹா | தித்தெய் தாஹா/ | தத்தெய் தாஹா | தித்தெய் தாஹா// |

**தேர்ச்சி 4.0 :** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.5 :** இசைக்கருவிகளை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.5.1 :** இசைக்கருவிகளை வகைப்படுத்துவோம்.

## இசைக் கருவிகளின் வகைகள்

இவை நான்கு வகைப்படும். அவையாவன,

1. தோற்கருவி
2. துளைக்கருவி
3. கஞ்சக் கருவி
4. நரம்புக் கருவி

1. தோற்கருவி

இவை மரத்தினால் செய்யப்பட்டு தோலினால் மூடியிருக்கும் கருவியாகும்.

உ - ம் : மத்தளம், தவில், கெஞ்சிரா, உடுக்கு.

2. துளைக்கருவி

மரத்தினால் துளையுடன் செய்யப்பட்டு இருக்கும்.

உ - ம் : புல்லாங்குழல், நாதஸ்வரம், முகவீணை

3. கஞ்சக் கருவி :

இவை உலோகத்தினால் செய்யப்பட்டிருக்கும்.

உ - ம் : தாளம், ஜால்ரா

4. நரம்புக்கருவி

இவை மரத்தினால் செய்யப்பட்டு நரம்புகள் அல்லது தந்திகள் பூட்டப்பட்டிருக்கும்.

உ - ம் : வீணை, தம்புரா, கொட்டு வாத்தியம், பிடில்.

# தோல் வாத்தியம்

தவில்



உடுக்கு



## துளை வாத்தியம்

நாதசுரம்



புல்லாங்குழல்



## கஞ்சக் கருவி

தாளம்



நரம்புக் கருவி

வீணை



தம்புரா



**வயலின்**



**தேர்ச்சி** 4.0 : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.4 :** இசைக்கருவிகளை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு** 4.4.2 : மங்களவாத்தியமான நாதசுரம் பற்றி அறிந்து கொள்வோம்.

## நாதசுரம்

இது ஒரு மங்கள வாத்தியமாகும். ஆலயங்களிலும் விழாக்களிலும் திருமண வைபவங்களிலும் சடங்குகளிலும் இசைக்கப்பட்டு வருகிறது. இசைக் கச்சேரிகளிலும் இறந்துவிட்ட துக்க சம்பவங்களிலும் கூட இடம்பெறும் இசைக்கருவியாக இருந்து வருகிறது. இது ஒரு பழமையான காற்று வாத்தியமாகும். பழங்காலம் தொட்டு மடங்களிலும் கோயில்களிலும் நிரந்தரமாக ஆலய வழிபாட்டிடங்களில் வாசிக்கப்பட்டு வரும் ஒரு இசைக்கருவியாக இருந்து வருகிறது.

தென்னகத்தில் ஆலயங்கள் உருவானபோதே நாதசுரமும் உருவானதாகச் சொல்லப்படுகிறது. எனவே இதை ஆலய வாத்தியம் என்றும் அழைப்பர். பழங்காலத்தில் மலைவாழ் மக்களும் கிராமப்புறத்து மக்களும் நாட்டுப்புற இசையிலும், தெருக்கூத்துக்களிலும் பூம் பூம் மாட்டுக்காரர் நிகழ்ச்சியிலும் நாதசுரம் பயன்படுத்தி வந்துள்ளனர். மேடையில்லாமல் வாசிக்கும் சிறப்புக்குரிய கருவியாகவும் இருந்து வருகிறது. நாதசுரம் மற்ற இசைக் கருவிகளைப் போல் தனித்தியங்கும் கருவியாக இல்லாமல் தாளக் கருவியான தவிலோடு இணைந்தே இசைக்கப்படும் மங்கள இசைக்கருவியாக விளங்கி வருகிறது.

நாதசுர இசை வெகு தொலைவுவரை கேட்கக் கூடியதாக விளங்குகிறது. நாதசுரம் , ஒத்து, தவில், ஜால்ரா ஆகிய இசைக்கருவிகளின் வரவைப் பெரியமேளம் என்று சொல்வர். நாதசுரத்திற்கு எழில், வயிர், வங்கியம், பெரிவங்கியம் என்ற மறுபெயர்களும் உண்டு. நாதசுரத்தில் இசையின் எல்லா அம்சங்களையும் மிகச் சிறப்பாகக் கையாள முடியும். நம் முன்னோர்கள் ராக ஆலாபனையை மணிக்கணக்கில் நாட்கணக்கில் வாசித்து சிறப்புச் சேர்த்துள்ளனர். 20ஆம் நூற்றாண்டில் திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை மிக உயர்ந்த சங்கீதத்தை மிக அற்புதமான கற்பனை வளத்துடன் நாதசுரத்தில் வழங்கி வந்தார். நாதசுரம் மிகப் பழங்காலத்திலிருந்தே தோன்றியதாக வரலாறு கூறுகிறது.

கி.பி 18ஆம் நூற்றாண்டு வரை 18 1/2 அங்குல நீளமுடைய 4 1/2 கட்டை சுருதி நாதசுரம் பழக்கத்தில் இருந்து வந்ததாக அறியப்படுகிறது. இதில் 7 விரல் துளைகளும் அதற்குக் கீழ் சிறிது தள்ளி 8ஆவது துளையும் இடப்பட்டுள்ளது. 8 ஆவது துளைக்குப் பிரம்ம ஸ்வரத்துளை என்று பெயர். இத் துளையின் வழியாகக் கூடுதலாக உட்செல்லும் காற்று வெளியில் செல்வதற்குப் பயன்படுகிறது. இத்துளையை அடைத்துவிட்டால் பஞ்சம ஸ்வரம் கேட்காது.

அடுத்து நாதசுரத்தின் கீழ்ப்பகுதியில் இருபக்கவாட்டிலும் ஒன்றன்கீழ் ஒன்றாக இரண்டு சோடி துளைகள் இடப்பட்டிருக்கும். இத் துளைகள் ஜீவ ஸ்வர துளைகள் எனப்படும். இதில் மேலே உள்ள இரண்டு துளைகளை மூடிவிட்டால் மத்ய ஸ்வரம் சரியாகக் கேட்காது. அதேபோல் கீழே உள்ள இரண்டு துளைகளை மூடிவிட்டால் தைவதம், நிஷாத, ஸ்வரம் சரியாகக் கேட்காது. மேற்படி ஸ்வரங்களில் 1/4 ஸ்வரம் 1/2 ஸ்வரம் குறைக்க அதை மெழுகால் அடைத்துக் கொள்வர்.

3 - 3 1/2 , 4 - 4 1/2 கட்டை சுருதி நாதசுரங்களுக்கு “திமிரி” நாதசுரம் என்று பெயர். 2 1/2 கட்டை நாதசுரத்திற்கு இடையார் என்று பெயர். “2”கட்டை சுருதி நாதசுரம் மற்றும் மத்தியம சுருதி நாதசுரத்திற்குப் “பாரி” நாதசுரம் என்று பெயர்.

### அமைப்பு

ஆச்சா மரத்தில் குடைந்து செய்யப்படுகிறது. இதன் மேல் பகுதி சிறுத்தும் அதன் கீழ் பகுதி சிறிது அகன்றும் இருக்கும். அதன் நீண்ட குழலுக்கு “உளவு” என்று பெயர். குழலின் மேல் முனையில் கூம்பு வடிவில் சிறிய அணுசு செதுக்கப்பட்டு அதன் நடுவில் சிறு துளையிடப்பட்டு அதில் காற்று உட் செலுத்தும்படியாக அமைந்திருக்கும். குழலின் கீழ் முனையில் தூக்குமரத்தால் கடையப்பட்ட புனல் வடிவ அணுசு பொருத்தப்பட்டிருக்கும். நாதசுரம் வாசிக்க சீவாளி

பயன்படுத்தப்படுகிறது. இந்த சீவாளி என்பது கொனுக்கு எனப்படும். நாணல்தட்டை வேகவைத்து அதில் கெட்டிப் பலகைவைத்து கட்டி பட்டையாக்கப்பட்டு பிறகு தேவையான அளவு நறுக்கி எடுக்கப்படுகிறது. இதற்கு "நறுக்கு" என்று பெயர். இந்த நறுக்கின் கீழ் பகுதியின் நடுவில் துளை இருக்கும்படி செய்து அதை உருண்டை ஆக்கிக் கெண்டையுடன் இணைத்து நாதசுரத்தின் மேல் அனுசில் கொடுக்கப்பட்டிருக்கும். கெண்டை என்பது தேங்காய் ஓட்டின் சிறு துண்டை எடுத்து அதைத் தேய்த்து பளபளப்பாக்கி அதன் நடுவில் சிறு துளையிட்டு அதில் 1 1/2 அங்குல நீளமுடையதும் ணரு நெல்மணி அளவு விட்டமும் கொண்டதுமான பித்தளைக் குழாய் சொருகி நூலால் இறுக்கி சுற்றப்பட்டிருக்கும். இதை மேற்கொள்ள நறுக்கின் உருண்டைப் பகுதியில் பொருத்தி இறுகக் கட்டி முழுவடிவ சீபாளி உண்டாக்கப்பட்டிருக்கும். இந்தச் சீபாளியின் மூலம் காற்றை உட்செலுத்தி நாதசுரம் வாசிக்கும் போது சீவாளியில் எச்சில் புகுந்து அடைப்பு ஏற்பட்டுவிடாமல் இருக்கவும் மேலும் சீவாளி - உலர்ந்து இருபக்க தக்கையும் ஒட்டிக்கொள்ளும்போது அதைச் சீர செய்யவும் யானைத் தந்தத்தாலோ அல்லது மான் கொம்பினாலோ ஆன சுமார் 2 1/2 அங்குல நீளக்குச்சி இதன் ஒரு முனை சிறிது கூறாகவும் அதன் மறுமுனை சிறிது அகன்றும் இருக்கும் வகையில் செதுக்கி சீவாளியுடன் கட்டித் தொங்க விடப்பட்டிருக்கும்.

இதைத் தேவைப்படும்போதெல்லாம் சீவாளிக்குள் சொருகி எடுத்து தடைகள் அகற்றப்பட்டு நாதசுரம் வாசிக்கப்படும். நாதசுரத்தில் 2 1/2 ஸ்தாயி வரை வாசிக்கலாம். இக் கருவியில் சீவாளி அதாவது நறுக்கு மூலம் காற்றை உட்செலுத்தி வாசிப்பதால் காற்றுக் கசிவு ஏற்பட வாய்ப்பில்லை. இதன் காரணமாக நீண்ட நேரம் ராக ஆலாபனை செய்ய இது உதவுகின்றது. நாதசுரம் அதிக ஒலி எழுப்பும் வாத்தியமாக விளங்கினாலும் ஊதும் காற்று விரையமாகாமல் உட்செல்வதால் இதில் மேலும் ஒலி கனமுள்ளதாகவும் கம்பீரமாகவும் வெளிப்பட ஒரு வாய்ப்பாக இருக்கிறது. இதனால் நாதசுரத்தின் ஒலி வெகுதூரம் கேட்கும் ஆற்றலுடையதாக விளங்குகிறது. அரங்குகளில் வாசிக்கையில் சபதத்தைக் குறைக்க நாத தரத்தின் கீழ் அணுசு பகுதியில் துணி வைத்து அடைத்து வாசிக்கப்படுகிறது.

**சிறப்பம்சங்கள்**

இது ஒரு மங்கள வாத்தியமாகும். இதில் வரும் நாதமும் ஜீவனும் இந்த இசைக் கருவிக்கு தனிச் சிறப்பை அளிக்கிறது. இது நீண்ட நேரம் மணிக்கணக்கில் ராக ஆலாபனை செய்ய உகந்த வாத்தியமாகும். இசையின் நெளிவு சுளிவுகளையும் அதன் பாவங்களையும் மிக இனிமையாகவும் நயமாகவும் கொடுத்து வாசிக்க ஏற்ற வாத்தியமாகும். இதன் ஒலி கனமுள்ளதாகவும் கம்பீரமானதாகவும் நீண்ட தொலைதூரம் வரைசென்று கேட்கக் கூடிய தன்மையுடையதாகவும் விளங்குகிறது. திறந்த வெளியில் வாசிக்க ஏற்ற வாத்தியமாகவும் விளங்குகிறது. இது கோயில்களிலும் விழாக்களிலும் முக்கிய நிகழ்ச்சிகளிலும் மற்றும் திருமணம் போன்ற அனைத்து மங்கள வைபவங்களிலும் வாசிக்கப்படும் ஒரு முதன்மையான வாத்தியமாக விளங்குகிறது. இதன் வாசிப்பு திருமண வீடுகளில் மங்களகரமான சூழலை உருவாக்கி அங்கு மங்கள நிகழ்ச்சி நடைபெறுகிறது என்பதைப் பறைசாற்றும் ஒரு தனிச்சிறப்பு மிக்க இசைக் கருவியாக விளங்குகிறது. நாதசுரம் முதன்முதலில் மக்களிடையே தெருக்கூத்துக்களிலும் நையாண்டி மேளத்திலும் வாசிக்கப் பயன்படுத்தப்பட்டது. பின்னர் நாட்டுப்புற இசையில் பயன்படுத்தப்பட்டது. அதன் பின்னர் ஒலியின் தனிச்சிறப்பின் காரணமாக கர்நாடக இசையில் சிறப்புப் பெற்றது. நாதசுரத்திற்கு ஒத்து சுருதி வாத்தியமாகவும் தவில், தாள வாத்தியமாகவும் ஜால்ரா தாளக் கணக்கை வெளிப்படுத்திக் காட்டும் துணை வாத்தியமாகவும் விளங்குகிறது. இந்த நாதசுரக் குழுவை பெரிய மேளம் என்றும் கூறுவர்.

## நாதசுரம் செய்யப் பயன்படும் பொருள்கள்

நாதசுரம் முற்காலத்தில் வெண்கலம், வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்களால் செய்யப்பட்டது. மற்றும் சந்தனம், கருங்காலி, செங் கருங்காலி, வேங்கை போன்ற மரங்களில் செய்தனர். இவற்றில் செய்ததை சத்தமம் என்று "நடனாதி சாத்திய ரஞ்சனம்" என்ற நூல் குறிப்பிடுகிறது. இது பலவகை மரங்களாலும் உலோகங்களாலும் செய்யப்பட்டு வந்தாலும் ஆச்சா மரத்தில் செய்யப்படும் நாதசுரமே சிறந்ததாகக் கருதப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டம் ஆழ்வார் திருநாரிலுள்ள ஆழ்வார்

கோயிலிலும் தஞ்சை கும்பகோணத்தில் உள்ள ஆசிகும்பேசர் ஆலயத்திலும் திருவாரூரில் உள்ள தியாகராசசுவாமி ஆலயத்திலும் கருங்கல்லால் செய்யப்பட்ட கல் நாதசுரங்கள் காணப்படுகின்றன.

## நாதசுரம் என்ற பெயர்வரக் காரணம்

நாதசுரத்தை நாகப்பட்டினத்தில் உள்ள நாகர் என்னும் இனத்தைச் சார்ந்தவர்கள் முதன் முதலில் வாசித்ததாக வரலாறு கூறுகிறது. அதன் காரணமாக இவ் வாத்தியத்திற்கு நாதசுரம் என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். நாதசுரமும் அதன் கீழ் முனையில் உள்ள புனல் போன்ற அணுசும் நாகபாம்பு படம் எடுத்தாற்போல் தோற்றமளிப்பதால் இதற்கு நாகசுரம் என்ற பெயர் வந்தது என்றும் சிலர் கூறுவர். நல்ல நாதம் கலந்த ஸ்வரத்தை இல் வாத்தியம் வெளிப்படுத்துவதால் இதற்கு நாத - சுரம் என்ற பெயர் வந்தது என்றும் சிலர் கூறுவர். நாட்டுக்குத் தலைவனும் இறைவனும் நாயகன் என்றழைக்கப்படுபவர். நாயகன் உலாவரும் போது கையாளப்பட்ட இசைக்கருவி நாதசுரம். இங்கு நாயகன் உலாவருதலை ‘‘நாயகயானம்’’ என்று சொல்லப்பட்டது. எனவே நாயகயானத்திற்குரிய பிரதான வாத்தியமாக இவ்விசைக்கருவி விளங்கியால் நாயகயானம் என்ற வார்த்தை குறுகி காலப்போக்கில் நாயனம் என வழங்கலாயிற்று என்றும் சொல்லப்படுகிறது. நாதசுரத்தை பெருவங்கியம் என்றும் கூறுவர். இங்கு ‘‘பெரு’’ என்பது நீண்ட என்ற பொருள்படும். வங்கியம் என்பது குழல் என்ற பொருள்படும். எனவே நீண்ட குழலை உடையதாய் நாதசுரம் விளங்குவதால் இதற்குப் பெருவங்கியம் என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். நாதசுரத்தை முகவீணை என்றும் கூறுவர் அதாவது நாதசுரத்தை முகத்திற்கு நேராக வாயில் வைத்து ஊதப்படுவதால் இதனை முகவீணை என்றும் கூறுவர்.

## நாதசுரக் கலைஞர்கள்

திருவெண்காடு சுப்ரமண்யபிள்ளை , திருவிடைமருதூர் பி.வீரசாமிப்பிள்ளை, திருப்பாம்புரம் நடராஜ சுந்தரம்பிள்ளை, குஞ்சிதபிள்ளை, சோமசுந்தரம்பிள்ளை, திருவீழிமிழலை சுப்பிரமணியம்பிள்ளை, நடராஜசுந்தரம்பிள்ளை, இஞ்சிக்குடி பிச்சைக் கண்ணுபிள்ளை, திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை, செம்பொன்னார் கோயில் ராமசாமிப்பிள்ளை, நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், மதுரை சேதுராமன் - பொன்னுசாமி, ஷேக் சின்ன மொலினாசாகிப், காரைக் குறிச்சி அருணாசலம்பிள்ளை, திருவீழிமிழலை பி.எஸ்.ராஜா, எஸ், ஆர்.சிவராஜா.




**தேர்ச்சி** ன்னணியை

**தேர்ச்சிமட்டம்** ர்.

**செயற்பாடு** வாம்.

## இலங்கையில் பரதக்கலை

- இலங்கையில் வளப்பெருக்குச் சடங்கு, மந்திர சடங்குகளுடன் இணைந்து இடம்பெற்ற ஆடல் பின்பு செவ்வியல் நடனமாக விருத்தி கண்டது.

- இலங்கை இந்தியாவுடன் தொடர்பு பரஸ்பர கலைத் தொடர்பிற்கு வழிகோலியது.

- இந்தியாவிற்கு அண்மையிலி இலங்கை இருப்பதனால் ஏற்பட்ட பல்வேறு உறவுகள் காரணமாக கலைப் பரிமாற்றம் நிகழ்ந்தது.

- பரதம் என்ற செவ்வியல் நடனம் தோற்றம் பெற முன்பு மக்களிடம் கிராமியப் பின்னணியுடன் இணைந்த ஆடல் முறை இலங்கை, இந்தியாவில் காணப்பட்டது.

- இலங்கைத் தமிழர்களுக்கென்று ஒரு தனித்துவமான ஆடல் சிங்கள மக்களுக்குரிய கண்டிய நடனம் போல் இல்லை. ஆனாலும் தென்னிந்தியத் தமிழர்களின் பண்பாட்டில் தோற்றம் பெற்ற பரதக் கலையானது எம்முடன் நீண்டு நிலைபெற்றுள்ளது.

- திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் போன்ற சிவாலயங்களில் நடனக்கலை இருந்தது.

- முதலாம் பராக்கிரமபாகு இசை, நடனம் ஆகியவற்றைப் பேணி வந்தான்.

- இலங்கையில் சோழனின் தலைநகரமாக விளங்கிய பொலனறுவையில் அமைந்துள்ள வானவன் மாதேவி ஈஸ்வரத்தில் தேவரடியார் இருந்தனர்.

- பொலனறுவை, தெவிநுவர இடங்களில் உள்ள சைவ, வைணவக் கோயில்களில் தேவரடியார்கள் இசை, நடனப் பணிகள் செய்தனர் எனக் குறிப்புகள் உண்டு.

- அனுராதபுர அபயகிரி விகாரையில் நடன நிலையில் உள்ள அர்த்தநாரீஸ்வரர் சிலை காணப்படுகிறது.

- கைலாயமாலை நூலில் நடனக் குறிப்புகள் உண்டு.

- யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த கனகி என்னும் தேவதாசி வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் ஒரு நர்த்தகியாக விளங்கினார்.

- எம்பக்க தேவாலயத்தில் மர சிற்பங்களில் உள்ள நடனமாதர் பரதர் கூறும் பல்வேறு நடன நிலையில் காணப்படுகின்றனர்.

- இந்தியாவில் பரதக்கலைக்கு ஏற்பட்ட தாக்கம் இலங்கையிலும் பரதக்கலைக்கு ஏற்பட்டது.